**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, காஞ்சிபுரம்</u>**

**முன்னிலை: திரு.து.நவீன் துரை பாபு, பி.ஏ., பி.எல்.,எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர் எண்.2, காஞ்சிபுரம்.**

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04 ஆம் நாள் வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 56/2023**

**CNR.No.TNKPOA-000617-2023**

**PARTICULARS UNDER RULE 106 OF CRIMINAL RULES OF PRACTICE, 2019:-**

| | | |
|---|---|---|
| 1. | Name of Police Station and the Crime Number of the offence | B5, Walajabad Police Station in cr.no.335/2018 |
| 2. | Name | 1. Prakash, 2. Ganapathy, 3. Rajendiran |
| 3. | Father/Husband Name | 1. Shanmugam, 2. Kumar, 3. Janakiraman |
| 4. | Occupation | -- |
| 5. | Residence | A1 & A2 residing at Villivalam Village, Walajabad Taluk, Kancheepuram District.<br>A3 residing at Pendai Village, Walajabad Taluk, Kancheepuram District. |
| 6. | Age | -- |
| 7. | Date of Occurrence | 24.06.2018 |
| 8. | Date of Complaint | 25.06.2018 |
| 9. | Date of Apprehension | A1 to A3 – AB on 02.07.2018 |
| 10. | Release on bail | A1 & A2 – surrendered & released on 03.07.2018<br>A3 – surrendered & released on 25.07.2018 |
| 11. | Commitment | -- |
| 12 | Commencement of Trial | 18.08.2025 |
| 13 | Closure of Trial | 04.09.2025 |
| 14 | Sentence or Order | 04.09.2025 |
| 15 | Service of copy of Judgment or finding on accused | Acquittal |
| 16 | Explanation of delay | -- |

**<u>CASE SUMMARY</u>**

| S.No. | Particulars | Details |
|---|---|---|
| I | Period of Remand of Accused: | A1 to A3 – AB on 02.07.2018<br>A1 & A2 – surrendered & released on 03.07.2018<br>A3 – surrendered & released on 25.07.2018 |
| II | Date of filing of final report: | 31.01.2023 |
| III | Date of questioning of accused U/S.240 Crpc : | 21.06.2025 |



***Sd/- D.Naveen Durai Babu***
***JM No.II, KPM.***

| | | |
|---|---|---|
| IV | Filing of miscellaneous petitions: | -- |
| V | Date of examination in chief and cross-examination of witnesses: | PW1 – 18.08.2025 & 18.08.2025<br>PW2 – 25.08.2025 & 25.08.2025 |
| VI | Date of examination of accused U/s.313(1)(b) crpc : | 04.09.2025 |
| VII | Details of abscondence of accused: | --- |
| VIII | Grant of stay by superior court: | --- |

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
B5, வாலாஜாபாத் காவல் நிலையம்,
குற்ற எண். 335/2018 . . . குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1. பிரகாஷ்,
த/பெ. சண்முகம்,
2. கணபதி,
த/பெ. குமார்,
இருவரும் வசிக்குமிடம்
வில்லிவலம் கிராமம்,
வாலாஜாபாத் தாலுக்கா,
காஞ்சிபுரம் மாவட்டம்.
3. ராஜேந்திரன்,
த/பெ. ஜானகிராமன்,
பென்டை கிராமம்,
வாலாஜாபாத் தாலுக்கா,
காஞ்சிபுரம் மாவட்டம். . . . எதிரிகள்

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் 10.02.2023 ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை II அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் E.சேது, V.பார்த்திபன், D.லிங்கப்பன், M.சரவணன், V.படையப்பா ஆகியோர்கள் முன்னிலையாகி நடைபெற்ற வழக்கில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . .

## தீர்ப்புரை

1. இவ்வழக்கு கு.வி.மு.ச பிரிவு 173(2) ன் கீழ் பி5, வாலாஜாபாத் காவல் நிலைய



***Sd/- D.Naveen Durai Babu***
***JM No.II, KPM.***

உதவி ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். கடந்த 24.06.2018 ஆம் தேதி மாலை சுமார் 07.30 மணியளவில் பெண்டை கிராமம் பாலம் அருகே வாதி சேகர் என்பவர் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது அங்கு நின்றிருந்த எதிரிகள் மூவரும் வாதியை கோத்தா தெவிடியா பையா நாங்க மூன்றுபேர் இருக்கிறது தெரியலையா என அசிங்கமாக திட்டி, எதிரிகள் கணபதி மற்றும் ராஜேந்திரன் இருவரும் கைகளால் அடித்து கீழே தள்ளி பிரகாஷ் என்பவர் அருகிலிருந்த பீர் பாட்டிலால் வாதியின் பின் மண்டையில் அடித்துவிட்டு எங்கள் மூவரையும் உன்னால் ஒன்றும் பன்னமுடியாது என மிரட்டியதால் 1வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இ.த.ச.வின் கீழும், 2வது மற்றும் 3வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii) இ.த.ச.வின் கீழும் வாலாஜாபாத் காவல் நிலைய உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கானது கோப்புக்கு எடுக்கப்பட்டவுடன் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பபட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207—ன் கீழ் வழங்கப்பட வேண்டிய நகல்களை இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து குற்றங்களை பற்றி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருப்பதற்கான முகாந்திரம் இருந்ததால் 1வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இ.த.ச.வின் கீழும், 2வது மற்றும் 3வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii) இ.த.ச.வின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூறப்பட்டது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம் :</u>**

**அ.சா.1 சேகர்** தனது சாட்சியத்தில், கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு 08.00 மணியளவில் ஆஜர் எதிரிகளுக்கும் தனக்கும் வாய்தகராறு இருந்துவந்ததால் அன்று 10க்கும் மேற்பட்ட நபர்களுள் யாரோ ஒருவர் தன்னை



***Sd/- D.Naveen Durai Babu***
***JM No.II, KPM.***

அடித்துவிட்டார் என்றும் ஆஜர் எதிரிகளுடன் இருந்த முன்விரோதம் காரணமாக அவர்கள் மீது புகார் கொடுத்துவிட்டதாகவும் தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டபடியால் வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை என்றும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

**அ.சா.2 இளங்கோவன் உதவி ஆய்வாளர்** தனது சாட்சியத்தில், 25.06.2018 அன்று காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைக்கொண்டு அங்கு சிகிச்சையிலிருந்த சேகர் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று கு.எண்.335/2018 பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) இ.த.ச.வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாபு மற்றும் ரமேஷ் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து காயம்பட்ட நபரான சேகர் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடுடன் கூடிய கயாச்சான்று பெற்று விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிகளுக்கு எதிரான சூழலை தொகுத்து பிரிவு 313(1) (ஆ) ன் கீழ் எதிரிகளிடம் வினவ எதிரிகள் அவர்களுக்கு எதிரான சாட்சியங்கள் யாவும் பொய் சாட்சிகள் என்றும், வழக்கை குறித்து வினவியபோது பொய் வழக்கு என்றும் தங்களது தரப்பில் விசாரிப்பதற்கு சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார்கள்.

6. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் அரசு தரப்பால் 1வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இ.த.ச.வின் கீழும், 2வது மற்றும் 3வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii) இ.த.ச.வின் கீழுமான குற்றச்சாட்டு அனைத்துவித ஐயப்பாட்டிற்கும் அப்பாற்பட்டு நிருபிக்கப்பட்டதா? இல்லையா? என்பதேயாகும்.

**தீர்வு :**

7. அரசு தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில், 24.06.2018 ஆம் தேதி மாலை



*Sd/- D.Naveen Durai Babu*
*JM No.II, KPM.*

சுமார் 07.30 மணியளவில் பெண்டை கிராமம் பாலம் அருகே வாதி சேகர் என்பவர் வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது அங்கு நின்றிருந்த எதிரிகள் மூவரும் வாதியை கோத்தா தெவிடியா பையா நாங்க மூன்றுபேர் இருக்கிறது தெரியலையா என அசிங்கமாக திட்டி, எதிரிகள் கணபதி மற்றும் ராஜேந்திரன் இருவரும் கைகளால் அடித்து கீழே தள்ளி பிரகாஷ் என்பவர் அருகிலிருந்த பீர் பாட்டிலால் வாதியின் பின் மண்டையில் அடித்துவிட்டு எங்கள் மூவரையும் உன்னால் ஒன்றும் பன்னமுடியாது என மிரட்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு எதிராக சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றச்சாட்டு நிருபிக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டுமென வாதிட்டார்.

8. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தில், இவ்வழக்கில் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும், அரசு தரப்பு சம்பவ சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எதிரிகள் மீது பொய்யான ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டியவர் என்றும் வாதிட்டார்.

9. இரு தரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்கு கோப்புகளை ஆராய்ந்து பார்க்கையில், இந்த வழக்கில் அரசு தரப்பால் முன்னிலைபடுத்தப்பட்ட சம்பவத்தில் காயமடைந்ததாக சொல்லப்படும் புகார்தாரரான அ.சா.1 சேகர் தனது சாட்சியத்தில் சம்பவத்தின்போது ஆஜர் எதிரிகளுக்கும் தனக்கும் வாய்தகராறு ஏற்பட்டதாகவும் அப்போது 10 க்கும் மேற்பட்ட நபர்கள் இருந்ததாகவும் அதில் யார் அடித்தாரகள் என்று தெரியவில்லை என்றும் ஆஜர் எதிரிகள் மீது இருந்த முன்விரோதத்தின்காரணமாக அவர்கள்தான அடித்திருப்பார்கள் என்று புகார் கொடுத்துவிட்டதாகவும் தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டதாகவும் புகார் சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பத்தை ஏற்றுக்கொள்கிறார். அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து



*Sd/- D.Naveen Durai Babu*
*JM No.II, KPM.*

குறுக்குவிசாரணை செய்தபோதிலும் அவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

10. இந்த வழக்கில் அ.சா.2 இளங்கபோவன் உதவி ஆய்வாளரை தவிர வேறு எந்த ஒரு சாட்சியும் அரசு வழக்கிற்கு ஏற்றார் போல் சாட்சியம் அளிக்கவில்லை. ஏனைய பட்டியல் சாட்சிகளான 2 முதல் 8 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டுள்ளனர். அ.சா.2ம் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 இளங்கோவன் என்பவரின் சாட்சியத்தை வைத்து மட்டுமே எதிரிகள் குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் என்ற முடிவிற்கு வந்துவிட முடியாது. காயமுற்ற சாட்சியான அ.சா.1 சேகர் அரசு வழக்கிற்கு ஏற்றாற் போல் சாட்சியம் அளித்திடாத சூழ்நிலையில் அரசு தரப்பில் முன்னிலைபடுத்தியது போல் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

11. முடிவாக 1வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 324, 506(ii) இ.த.ச.வின் கீழும், 2வது மற்றும் 3வது எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 506(ii) இ.த.ச.வின் கீழுமான குற்றசாட்டுகளை அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து எதிரிகளை விடுதலை செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் ஏற்கனவே எழுதிக்கொடுத்துள்ள பிணை முறியை ரத்து செய்யவும் உத்தரவிடப்படகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் உத்திரவிற்கு இல்லை.

இத்தீர்ப்புரை என் சொல்லிற்கேற்ப சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2025 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 04 ஆம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

NAVEEN DURAIBABU Digitally signed by NAVEEN DURAIBABU

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**காஞ்சிபுரம்.**



***Sd/- D.Naveen Durai Babu***
***JM No.II, KPM.***

<u>**பின்சேர்க்கை**</u>

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு. சேகர் | த/பெ. ஆறுமுகம் |
| அ.சா.2 | திரு. இளங்கோவன் | காவல் உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 25.06.2018 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 25.06.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 25.06.2018 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 25.06.2018 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | 25.06.2018 | விபத்து பதிவேடு |

**அரசு தரப்பு சான்றுபொருள்கள் :–** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம் மற்றும் சான்றுபொருள் :–** இல்லை

NAVEEN DURAIBABU

Digitally signed by NAVEEN DURAIBABU

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**காஞ்சிபுரம்.**

<u>பின்குறிப்பு</u>

1. வழக்கின் முடிவு காவலருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
3. எந்த ஒரு சாட்சியையும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.



***Sd/- D.Naveen Durai Babu***
***JM No.II, KPM.***